**யாழ்ப்பாணம் மாநகரசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**
-------------------------------

## 1 நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஒக்ரோபர் 20 இல் சபையின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபைக்குரித்தான காணி கட்டடங்களின் பெறுமதிகள் கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளூராட்சி சேவை அலுவலர்களுடைய ஓய்வூதியங்களுக்கும் இளைப்பாற்று நயங்களுக்குமாக ஓய்வூதியப் பணிப்பாளருக்கு முன்னைய ஆண்டு செலுத்த வேண்டியுள்ள ரூபா 115,492,502 கணக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. திரண்டநிதி கணக்குகளில் கூடுதலாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

### 1.3.2 பெறவேண்டியவை

விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) 5 வருடத்திற்கு மேற்பட்ட முற்பணம் ரூபா 7,112,085 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 79,180 பெறுமதியான ஊழியர் கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 5 வருடத்திற்கு மேலாக 138 ஓய்வூதியர்களிடமிருந்து ரூபா 663,200 கடன் இற்றைவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை**

---------------------------------------

ரூபா 663,255 பெறுமதியான சான்றுகள் இல்லாமையின் காரணமாக 07 கொடுக்கல் வாங்கலை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

---------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் மாநகரசபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 42(அ) | (i) சபைக்குச் சொந்தமான 17 தற்காலிக கடைகளை நிரந்தர கடைகளாக அமைத்தபோது அங்கீகாரமற்ற கட்டடங்கள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) சபையின் எல்லையில் காணப்படும் 19 எண்ணிக்கையான அங்கீகாரமற்ற தொலைத்தொடர்பு கோபுர கட்டட அமைப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | |
| (i) இலக்கம் 381(3) | காசுடன் தொடர்புடைய உத்தியோகத்தரினால் பிணை செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) இலக்கம் 571 | ரூபா 4,353,847 பெறுமதியான நானாவித வைப்புக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) இலக்கம் 849(2) | மாநகரசபை முதல்வர் மற்றும் உறுப்பினர்களால் ரூபா 901,681 சர்வதேச அழைப்புக் கட்டணமாக சபை நிதியில் செலுத்தப்பட்டுள்ளது. |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 144,760,154 விளைந்திருப்பதுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 157,166,226 இருந்தமை நிதி விளைவு ரூபா 12,406,072 குறைவடைந்தமைக்கு செலவின அதிகரிப்பே காரணமாகும்.

**2.2 தொழிற்படு மூலதனம்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 581,228,518 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 448,510,646 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 132,717,872 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.3 வருமான முகாமைத்துவம்**

**2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** |
| இறைகளும் வரிகளும் | 58,819 | 64,899 | 69,807 |
| குத்தகை வாடகைகள் | 62,504 | 90,306 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 19,514 | 17,476 | - |
| ஏனைய வருமானங்கள் | 629,298 | 575,054 | 311,349 |
| **மொத்தம்** | **770,135** | **747,735** | **381,156** |

**2.3.2 வீதவரிகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) வருமானப் பரிசோதகரினால் மீளாய்வாண்டுக்கான நிலுவைக் கட்டணம் செலுத்தாதோரின் அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமான நிலுவை ரூபா 69,807,431 அறவிட ஆணையாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 குத்தகைகள் மற்றும் வாடகைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபைக்கு சொந்தமான 184 கடைகள் சட்டரீதியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் வாடகை ரூபா 4,897,657 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3.4 உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள்

உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் ரூபா 283,734 அறவிடப்படாமல் உள்ளது.

## 2.3.5 முத்திரைக் கட்டணங்கள்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 262,435,940 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருக்கவில்லை.

# 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) முறையற்ற நியமனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 ஆம் ஆண்டு மின்னியலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்த 07 பேர்களில் 06 பேர்களிற்கு உரிய தகைமைகள் இல்லாதபோதும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(ii) ஒப்பந்த அடிபபடையில் நியமிக்கப்பட்ட மிருக வைத்திய சத்திர சிகிச்சை நிபுணரின் நியமனத்திற்கு உரிய நியமன அதிகாரியினால் நியமனம் வழங்கப்படாது ரூபா 419,215 சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டமை முறையற்ற கொடுப்பனவாகும்.

(iii) ஒப்பந்த அடிப்படையில் பொறியியலாளர் நியமிக்கப்பட்டு அனுமதியளிக்கப்படாத காலப்பகுதிக்கான சம்பளக் கொடுப்பனவும், முறையற்ற வாகனப் பயன்பாட்டுக் கொடுப்பனவுமாக ரூபா 750,791 வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஊழியர் நம்பிக்கை நிதியம் காலம் தாழ்த்தி வழங்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட தண்டப்பணம் ரூபா 387,173 கவனயீனத்திற்குப் பொறுப்பான ஊழியரிடமிருந்து அறவிடாமல் சபைநிதியில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(இ) மாநகர சபையின் வருடாந்த இருப்பு கணிப்பீட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா 56,500 மாகாண திறைசேரி PT/01/2009 இலக்க 28 ஜனவரி 2009 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) கட்டட அனுமதி தொடர்பான வேலைகளுக்கு கோவைகளைக் துரிதப்படுத்துவதற்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 168,200 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(உ) தாபன விதிக் கோவைக்கு முரணாக வாடகைக்கு வாகனம் பயன்படுத்திய வகையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 611,000 சபை நிதி மூலம் 2012 இல் செலுத்தப்பட்டிருந்தும் இற்றைவரை தீர்வை செய்யப்படவில்லை.

(ஊ) 2014 யூலை 19 ஆம் திகதி விபத்துக்குள்ளான வாகனம் தொடர்பில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நட்ட ஈடு பெறப்பட்டிருக்காமை சபைக்கு ஏற்பட்ட இழப்பாகும். இதன் பின்னர் ரூபா 1,958,200 ற்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 331,430 தொடக்கம் ரூபா 40,799,053 வரையான வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது

### 4.2 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

----------------------------------------------------------------------

சபையினால் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சொத்து முகாமைத்துவம்

------------------------------------

பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-----------------------------------------

சபையில் காணப்படும் 19 வாகனங்கள் பயன்பாடற்ற நிலையில் வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றது.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------------

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) வருமான சேகரிப்பு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) நன்கொடை
(ஈ) வாகனங்களின் பயன்பாடு
(உ) நானாவித வைப்புக்கள்
(ஊ) வரவு செலவுத்திட்டம்